


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 29.09.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- முக்கிய தினங்கள்







## தமிழக நிகழ்வுகள்

- தமிழக அரசானது **நவம்பர் 1** முதல் தனது கருவூல நடவடிக்கைகளை **முற்றிலுமாக ஆன்லைனில்** கையாள முடிவு செய்துள்ளது.
    - காகிதமற்ற பரிவர்த்தனைக்கு மாறுவதற்காக, தமிழக மாநிலமானது ஒருங்கிணைந்த நதி மற்றும் மனித வள மேலாண்மை **(Integrated Financial and Human Resource Management System)** என்னும் அமைப்பை செயல்படுத்த உள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- **அசாம்** மாநில அரசானது, தனது **மாநில தூதராக** இளம் ஓட்டப் பந்தய வீராங்கனையான **ஹிமா தாஸ்-யை** நியமித்துள்ளது.
- **குறிப்பு:**
    - ஹிமாதாஸ் **உலக ஜூனியர் சாம்பியன் ஷிப்** போட்டியில் **தங்கம்** வென்று சாதனை படைத்துள்ளார், மேலும் ஆசிய விளையாட்டு போட்டியில் பெண்கள் **400மீ ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கம்** வென்றார். அவருக்கு சமீபத்தில் **அர்ஜுனா விருதை மத்திய அரசு வழங்கியுள்ளது.**

- ஒரிஷா மாநிலத்தில் புதியதாக கட்டப்பட்ட **"ஜார்சுகுடா"** விமான நிலையத்தின் பெயரை சுதந்திர போராட்ட வீரரான வீர் **சுரேந்திரசாய்-ன்** பெயரிடுவதற்கான **தீர்மானம் ஒரிஷா சட்டசபையால் நிறைவேற்றப்பட்டுள்ளது**
- **குறிப்பு:**
    - இதற்கு முன் ஒரிஷா **புவனேஸ்வர் சர்வதேச விமான நிலையத்திற்கு "பிஜீபட்நாயக்"** என பெயர் மாற்றம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- மருத்துவக் கல்வி நிறுவனங்களின் தரத்தை நிர்ணயிக்கும்

அமைப்பாக **இந்திய மருத்துவக் கவுன்சில்** விளங்கி வருகிறது. இந்த அமைப்பை **கலைந்து விட்டு** அதற்குப் பதிலாக தேசிய **மருத்துவ ஆணையத்தை உருவாக்க மத்திய அரசு முடிவு** செய்தது. மத்திய அரசின் இந்த முடிவிற்கு நாடு முழுவதும் பரவலான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட போதிலும், இது தொடர்பான மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

  - இந்நிலையில், இந்திய மருத்துவ கவுன்சிலை நிர்வகிக்க தகுதி வாய்ந்த நபர்களை கொண்ட குழுவினை அமைக்க வழிவகை செய்யும் அவசரச் சட்டம் ஒன்றினை மத்திய அரசு இயற்றியுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **கல்வி மற்றும் சுகாதாரப் பணிகளில்** முதலீடு செய்வதை அடிப்படையாகக் கொண்டு, **"தி வான்சட்"** என்ற பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட மனித மூலதன மதிப்பீடு பட்டியலில் **இந்தியாவானது உலகின் 158-வது இடத்தில்** உள்ளது.
  - இப்பட்டியலில் பின்லாந்து முதலிடத்திலும், அமெரிக்கா 27-ம் இடத்திலும், சீனா 44-வது இடத்திலும் உள்ளது.

- சீனா நாட்டுக்கான இந்திய தலைமை தூதரான **"கவுதம் பாம்பாவாலே**-வின் பதவிக்காலம் முடிவடையவுள்ள நிலையில், சீனா நாட்டுக்கான புதிய தலைமை தூதராக **விக்ரம் மிஸ்திரி** நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- **குறிப்பு**
  - தற்போது **"விக்ரம் மிஸ்திரி" மியான்மர் நாட்டுக்கான இந்தியாவின் தலைமை தூதராக பொறுப்பு** வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- ஒடிசா மாநிலத்தில் உள்ள புவனேஸ்வரத்தில் நடைபெற்று வரும் **58-வது தேசிய ஓபன் தடகள சாம்பியன் ஷிப்** போட்டியில்

பெண்களுக்கான **100மீ தடை** ஓட்டத்தில் தமிழக வீராங்கனை **சி.கனிமொழி தங்கப்பதக்கம்** வென்றுள்ளார்.

- சிறப்பு அழைப்பு மூலம் கலந்து கொண்ட **ஜப்பான் வீராங்கனை சி. மோரா வெள்ளிப்பதக்கத்தையும்,** தமிழக வீராங்கனை **ஆர்.நித்யா வெண்கலப் பதக்கத்தையும்** வென்றுள்ளனர்.

## அறிவியல் மற்றும் தொழில் நுட்பம்

- நாசாவின் வெளிக்கோள்களை ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட செயற்கைக் கோளான **TESS –(Transiting Exoplanet Survey Satellite)** பூமியைப் போன்று இரண்டு வெளிக் கோள்களான **“சூப்பர் எர்த்” மற்றும் “ஹாட் எர்த்”** ஆகியவற்றை கண்டறிந்துள்ளது.
    - “சூப்பர் எர்த்” கோளானது பை மென்சே சி **(Pi Mensae C)** எனப் பெயரிடப்பட்டுள்ளது. **60 ஒளி ஆண்டுகள்** தொலைவில் உள்ள இக்கோள் சூரியனைச் சுற்றும் காலம் 63 நாட்கள் ஆகும்
    - “ஹாட் எர்த்” கோளானது **LHS 3844 b** எனப் பெயரிடப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 49 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள இது சூரியனைக் சுற்றும் காலம் ஒரு மணி நேரமாகும்.
- குறிப்பு:
    - **TESS** ஆனது சூரியக் குடும்பத்திற்கு அப்பால் உள்ள கோள்களை கண்டறிவதற்காக **ஏப்ரல் 2018-ல்** ஏவப்பட்டது. இதுவே **TESS**–ன் முதல் கண்டுபிடிப்பாகும்

## முக்கிய தினங்கள்

- **உலக ரேபிஸ் தினம் செப்டம்பர் - 28.**
    - ரேபிஸ் வைரசால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி விழிப்புணர்வு

We Shine Academy™

ஏற்படுத்தும் விதமாக ஆண்டுதோறும் **செப்டம்பர் - 28-ல்** உலக ரேபிஸ் தினம் கடைபிடிக்கப்படுகிறது

- ரேபிஸ் வைரஸ்க்கு, 1885-ல் முதன் முதலில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த **லூயிஸ் பாஸ்டர்** தடுப்பு மருந்தை கண்டுபிடித்தார். இவரைக் கவுரவப்படுத்தும் விதமாக, அவரது நினைவு தினம், உலக ரேபிஸ் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
- **2030-ம்** ஆண்டிற்குள் ரேபிஸ் வைரசால் உயிரிழப்பே இருக்கக் கூடாது என உலக சுகாதார நிறுவனம் இலக்கு நிர்ணயித்து உள்ளது.

We Shine Academy™